செ.வெ.எண்: 17 நாள்: 08.01.2018

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு சுமார் ரூ.14.09 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.01.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து விலையில்லா வீட்டுமனைப் பட்டா கோரி 75 மனுக்களும், பட்டா மாறுதல் கோரி 42 மனுக்களும், குடும்ப அட்டை தொடர்பாக 7 மனுக்களும், காவல்துறை நடவடிக்கை கோரி 28 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 17 மனுக்களும், விலையில்லா தையல் இயந்திரம் வேண்டி 2 மனுக்களும், பசுமைவீடு, சாலைவசதி, குடிநீர்வசதி ஆகியவைகள் கோரி 24 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 35 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் கோரி 24 மனுக்களும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 77 மனுக்களும் என மொத்தம் 331 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கினார்.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மாதாந்திர உதவித்தொகை கோரி 5 மனுக்களும், அரசு வேலைவாய்ப்பு கோரி 5 மனுக்களும், காது கேளாதோர் இயந்திரம் வழங்க கோரி 1 மனுவும், ஸ்கூட்டர் வழங்க கோரி 2 மனுக்களும், இலவச வீட்டுமனை பட்டா வழங்க கோரி 1 மனுவும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 3 மனுக்களும் என மொத்தம் 17 மனுக்களை பெற்று இம்மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும் இக்கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் முதலமைச்சரின் பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 38 பயனாளிகளுக்கு ரூ.13,80,745 மதிப்பில் முதிர்வுத் தொகைக்கான காசோலைகளையும், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நத்தமாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்த வின்சென்ட் என்பவர் பணியின் போது இறந்ததை தொடர்ந்து அவரது வாரிசுதாரர் செல்வி.ஸ்டெரின் மோனிசா சுமதி என்பவருக்கு கருணை அடிப்படையில் கொத்தகம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அமைப்பாளராக பணி நியமன ஆணையினையும், கறம்பக்குடி தாலுகா, வெள்ளாளக்கொல்லை கிராமத்தை சேர்ந்த திரு.முத்துகருப்பையா என்பவருக்கு 2 சிறுநீரகமும் பழுதடைந்துவிட்டதால் அவர் பெட்டிக்கடை ஒன்று வைப்பதற்கு மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியின்கீழ் ரூ.18,400-க்கான காசோலையையும், உலக சிக்கன நாள் விழாவினை முன்னிட்டு மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் செவித்திறன் குறையுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு படிப்பை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்திட

ஊக்கமளிக்க உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 7 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூ.10,500 மதிப்பிலான சேமிப்பு பத்திரங்களையும், 4 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகைக்கான ஆணைகளையும் என பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.14,09,645 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**